கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
44 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை— தமிழ் வளர்ச்சி-பண்பாடு	10	-	-
45 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை	4	-	-
46 போக்குவரத்துத் துறை	4	-	-
47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	4	-	-
48 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும்	56,73,51	-	-
49 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	426,10,97	-	-
பெருமொத்தம்	672,62,89	61,49,48	127,04,54

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு-அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்

விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவை விதிகளைத் தளர்த்தி இன்றே சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் தீர்மானம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2003) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.